*6th International Symposium 2016, South Eastern University of Sri Lanka, pp. 765-775.*

# IMPACTS OF ADVANCE LEVEL FORMAL EDUCATION SYSTEM BY THE DOMINATION OF PRIVATE TUTION CLASS: THE RESEARCH BASED ON MANMUNAI NORTH AREA, EDUCATIONAL ZONE-BATTICALOA

**Shandru Mariyadas**

Department of Education and Childcare, Faculty of Arts and Culture, Eastern University, Sri Lanka.
*chandrumariyadas@yahoo.com*

**ABSTRACT:** Today there are approximately thousands of government's schools in our country. We can observe for the Formal Education and its importance discouraged by the government schools. Tuition classes affect school Formal Education system. Furthermore students haven't given priority to pre-exclusive education in the school. Therefore today onwards Formal Education system has with question mark? Students mainly the Advance level students didn't give importance for the school teaching and learning activities. As the results cause conflicts between teachers and students, even parents motive the student to go tuition class for their prestige and status. Education objectives day by day gradual improvements of Educational tools and equipments, Effective administration and its advantages depend on teachers.Student's knowledge progress level consists by teacher's knowledge progress level. In this aspect very high competition for the University Entrance has been lead students to go private tuition classes. But it will not have been reduced teachers self respect. Currently many teachers expect to earn money from private tuition classes instead their government salary. It will reduce their prestige in the society. Therefore this study focused on to know about the impacts of private tuition classes and find to seek action to resolve those issues.

**Keywords:** Formal Education, Advance level, Private Tuition classes.

## 1.0 ஆய்வு அறிமுகம் (INTRUDUCTION)

### 1.1 அறிமுகம்

கல்வி முறையின் பல்வேறு இலக்குகளை பாடசாலை எனும் நிறுவனத்தினூடாக நிறைவேற்ற வேண்டும் என்கின்ற எதிர்பார்ப்பு முறைசார் கல்வியின் குறிக்கோளாகும். பிரத்தியேக வகுப்புக்களின் ஆதிக்கம் இன்று முறைசார் கல்வியின் தரத்தினைக் குறைத்துள்ளது என்பதில் ஐயமில்லை என்பதுடன் மாணவர்கள் பாடசாலைக் கற்றல் செயற்பாடுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்காத நிலையும் காணப்படுகின்றது. கால மாற்றங்களுக்கேற்ப கல்வி மாற்றங்கள் ஏற்படும் போது அவற்றினை நிறைவு செய்யும் நோக்கில் பாடசாலைச் செயற்பாட்டை முன்னெடுத்துச் செல்லும் பொறுப்பை இன்றைய ஆசிரியர்களே ஏற்க வேண்டியவர்களாவர். மாணவர்களை மையமாகக் கொண்டே ஒரு நாடு ஊட்டம் பெறுகின்றது. இதற்காகவே ஒவ்வொரு பாடசாலையும் உயிர்ப்பான குறிக்கோள்களுடன் உருவாக்கப்பட்டிருகின்றது. ஆனால் இன்று முறைசார் கல்வி நிலை உயிரோட்டம் இல்லாத கல்வி முறையாகியுள்ளமை கவலைக்குரிய விடயமாகும்.

### 1.2 ஆய்வுப்பின்னணி

இன்றைய நவீன காலகட்டத்தினை நோக்கும் போது சமூகத்தில் இடம்பெறும் ஒவ்வொரு செயற்பாடுகளும் பொருளாதார அடிப்படையில் இடம்பெறுகின்றது எனலாம். ஆரம்பகாலத்தில் சேவை அடிப்படையில் வழங்கிவந்த கல்வி இன்று பொருளாதாரத்தினை நோக்கிச் செல்கின்றது. கல்வி இலவசமாக்கப்பட்டமையால் இன்று அனேக மாணவர்களுக்கு அது அலட்சியமாக்கப்பட்டிருக்கின்றது. இதற்கு பெற்றோர்களின் கௌரவம், பிரத்தியேக வகுப்புக்களின் வண்ணமயமான விளம்பரங்களும் கவர்ச்சிகளும், பல்கலைக்கழக அனுமதியில் போட்டி நிலவுகின்ற சூழலில் பிரத்தியேக போதனைகளை மாணவர் பெறுவது தவிர்க்க முடியாத ஒன்றாக வந்துவிட்டதும், திறமை அடிப்படையில் வேலை வாய்ப்புக்கள், மாணவர்களின் நவநாகரீகப்போக்கும், எதிர்பாற் கவர்ச்சிகளும் போன்றவை பின்னணிகளாகவிருந்து பிரத்தியேக வகுப்புக்களுக்கு ஊக்கிகளாகத் தொழிற்பட்டுக்கொண்டிருக்கின்றன. இதனால் இன்று கைக்கெட்டும் தூர இடைவெளியில் பிரத்தியேக வகுப்புக்கள் கேள்விபார் இல்லாமல் உருவாக்கப்பட்டுக்கொண்டே

செல்கின்றது. இதனால் இன்றைய பாடசாலைகள் அரச பரீட்சைகளுக்கும், இணைப்பாடவிதான செயற்பாடுகளுக்கும் மட்டுமே முறைசார் கல்வி வழங்கும் நிறுவனங்களான பாடசாலைகளை மாணவர்கள் நாடுகின்றனர். கற்றலின் இலகு வழிமுறைகளினை பிரத்தியேக வகுப்புக்களின் மூலம் பெற்றுக்கொள்வதனால் பாடசாலைக் கல்வியை அலட்சியம் செய்கின்றனர்.

### 1.3 ஆய்வுக்கான நியாயம்.

முறைசார் கல்வியை வழங்கும் சில ஆசிரியர்கள் கூட பிரத்தியேக வகுப்புக்களில் கற்பிக்கின்றனர். பல்கலைக்கழக அனுமதியில் போட்டி நிலவுகின்ற சூழலில் பிரத்தியேக போதனைகளை மாணவர் பெறுவது தவிர்க்க முடியாத ஒன்றாக வந்துவிட்டதாயினும் அது ஆசிரியர்களது சுய கௌரவத்திற்கு பங்கம் ஏற்படுத்தும் வகையில் அமையக் கூடாது. மாதாந்த சம்பளப் பணத்தை விடுத்து தினசரி சந்தாப்பணம் பெறும் இன்றைய பிரத்தியேக கல்வி வழங்கும் ஆசிரியர்களது நிலை சமூகக் கண்ணோட்டத்தில் அவர்களது அந்தஸ்த்தை குறைத்துவிட்டது எனலாம். மீத்திறன் குறைவான மாணவர்களுக்கும், மெல்லக்கற்கும் மாணவர்களுக்கும் தான் மேலதிகமாக கல்வி வழங்கப்பட வேண்டும். ஆனால் இன்று பணத்தேவை ஒன்றினை மையமாகக் கொண்டு கல்வி விற்கப்படுகின்றது. மீத்திறன் குறைவான மாணவர்கள் பொருளாதார நெருக்கடிகள் காரணமாக பிரத்தியேக வகுப்புக்களுக்குச் செல்லாத நிலை காணப்படுகின்றது. எனவே பிரத்தியேகக் கல்வி அவசியம் தான் ஆனால் அவை தேவைப்படும் உரிய மாணவர்களுக்கு மட்டும் வழங்கப்பட வேண்டும்.

### 1.4 ஆய்வுப்பிரச்சினைகள்

முறைசார் கல்வியின் முக்கியத்துவம் இன்று இழக்கப்பட்டுள்ளதைக் காணக்கூடியதாக மாணவர்கள் பிரத்தியேக கல்வி நிலையங்களில் கற்றதன் பிற்பாடு மீண்டும் பாடசாலையில் அதே விடயம் கற்பிக்கப்படும் போது பாடசாலைக் கல்வியை அலட்சியப்படுத்தும் சூழ்நிலை காணப்படல். இதேவேளை பாடசாலை ஆசிரியர்களும் மாணவர்களின் இவ்வாறான செயற்பாடுகளினால்அசமந்த நிலைக்கு உட்படுதல். அனேகமான மாணவர்கள் எதிர்பாற் கவர்ச்சிக்காக பிரத்தியேகக் கல்வியை நாடுதல். பெற்றோர்கள் தமது சுய கௌரவத்திற்காக பிள்ளைகளை நிர்ப்பந்தம் செய்து பிரத்தியேக வகுப்புக்களுக்கு அனுப்புதல். மாணவர்கள் தமது பாடத்திட்டத்தினை முன்கூட்டியே பிரத்தியேக வகுப்புக்களில் நிறைவேற்றுவதால் அதிக விடுமுறைகள் எடுக்கின்றமை. முறைசார் கல்விக்கான ஒழுக்கங்கள் இழக்கப்படுகின்றமை. பாடசாலைகளில் குறிப்பிட்ட முக்கிய பாடங்களுக்கான தேர்ச்சி பெற்ற ஆசிரியர் குறைபாடுகள் காணப்படல். அதேவேளை சில பாடசாலைகளில் தேவைக்கதிகமாகக் காணப்படல். போன்றவை இங்கு ஆய்வுப் பிரச்சினைகளாக் கொள்ளப்படுகின்றன.

### 1.5 ஆய்வு நோக்கங்கள்

1. மட்டக்களப்பு கல்வி வலயத்தில் பிரத்தியேக வகுப்புக்களின் ஆதிக்கத்தினை உறுதிப்படுத்துதல்.
2. பிரத்தியேக வகுப்புக்களுக்கான செலவுகளும், செல்லாமையால் ஏற்படும் உளவியற் பாதிப்புக்களையும் மதிப்பிடுதல்.
3. பிரத்தியேக வகுப்புக்களின் வருகையால் பாடசாலைக் கற்றலில் மாணவர்கள் காட்டும் அலட்சியப்போக்கினை எடுத்துக்காட்டல்.
4. பிரத்தியேக வகுப்புக்களுக்கு மாணவர்கள் செல்வதற்கான காரணங்களைக் கணடறிதல்.

5. பிரத்தியேக வகுப்புக்களின் தேவைகள் யாருக்கு பொருத்தமானவை என்பது தொடர்பாக பெற்றோருக்கு விழிப்புணர்வுகளை ஏற்படுத்தல்.

### 1.6 இலக்கிய மீளாய்வு

தன்பிள்ளைக்கு உகந்த துறை எதுஎன்பதனை அறிந்துகொள்ளாமல் தன்னால் நிறைவேற்றிக் கொள்ளாத இலக்கினை தன் பிள்ளைகளைக்கொண்டு சாதிக்க முயற்சிப்போரின் கருவியே பிரத்தியேக வகுப்பு எனலாம். (நிக்கலஸ்,ஜெ. 2009) தனியாள் ஒவ்வொருவரையும் குவியப்படுத்தி கற்பித்தலில் சுவையும் விறுவிறுப்பும், கற்பவரைத் தூண்டும் விசையும், ஒத்துணர்வும், அன்பு வெளிப்பாடும், சோர்வுகளைத் தகர்ப்பதற்குரிய முறைகள், கற்றலை வளர்ப்பதற்குரிய சாதனங்களின் பயன்பாடும், மாணவர்களின் தனித்தனியான கவனிப்பு போன்ற பண்புகள் பிரத்தியேக வகுப்பு ஆசிரியர்கள் கொண்டிருப்பதனால் மாணவர்கள் பாடசாலை தொடர்பான கற்றல், கற்பித்தலில் அலட்சிப்போக்கினை அடைகின்றனர். (ஜெயராசா, சபா. 2007)

## 2.0 ஆய்வுமுறையியல் (METHODOLOGY)

### 2.1 ஆய்வு வடிவமைப்பு

விபரண ஆய்வு முறைகளில் ஒன்றான அளவை நிலை ஆய்வுமுறை இவ்வாய்விற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆய்வுப் பிரச்சினைக்குரிய தீர்வைக்காண, ஆய்வு நோக்கங்களை உருவாக்க, ஆய்வு தொடர்பான முன்னய அறிவு அவசியமாகும். இதற்காகவே இலக்கிய மீளாய்வு வலுச் சேர்க்கப்பட்டுள்ளது. ஆய்வு முறையியலும் இவ்வண்ணம் வடிவமைக்கப்பட்டுள்ளதுடன், ஆய்வு தொடர்பாக சேகரிக்கப்பட்ட தரவுகளின் பகுப்பாய்வும் அமைந்துள்ளது. தரவுகளைச் சேகரிப்பதற்காக ஆய்வுக்கருவிகள் தயாரிக்கப்பட்டன. இதற்காக வினாக்கொத்துக்கள் தயாரிக்கப்பட்டுமாதிரிகளாகத் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளின் அதிபர், ஆசிரியர், மாணவர், பெற்றோர் ஆகியோரிடம் கொடுத்துத் தரவுகள் பெறப்பட்டுஅவை தொடர்பான முடிவுகள் தொகுக்கப்பட்டன. உண்மையைக் கண்டறிவதற்கும், தரவுகளைத் தொகுத்து விமர்சிப்பதற்கும் அளவை நிலைஆய்வுகள் (Survey Research) அவசியமாகின்றன. அதற்கிணங்கவே முறைசார் கல்வியில் பிரத்தியேக மாக வழங்கப்படும் கல்விச் செயற்பாடுகளின் தாக்கம் தொடர்பான அறிவு, தகவல் என்பன தொகுக்கப்பட்டு அவற்றினைக்கொண்டு ஆய்வுதொடர்பாக விமர்சிக்கப்பட்டுள்ளதால் அளவைநிலை ஆய்வுமுறை இங்கு பயன்படுத்தப்பட்டுள்ளது.

இதற்கென மட்டக்களப்பு கல்வி வலயத்தின் மண்முனை வடக்குப் பிரதேச உயர்தரப்பிரிவு காணப்படும் IC மற்றும் IAB, தேசிய பாடசாலைகளில் 08 பாடசாலைகள் விகிதாசாரம் மற்றும் இலகு எழுமாற்று மாதிரி (Easy Random Sampling Method) மூலம் தெரிவு செய்யப்பட்டு அங்குள்ள அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் என்பவர்களிடம் இருந்து **வினாக்கொத்துமுறை, நேர்காணல்முறை, அவதானமுறை,** போன்ற ஆய்வுக்கருவிகள் துணைகொண்டு தரவுகள் பெறப்பட்டு மாதிரிகளின் விருப்பினைக் கொண்டும் ஆய்வு நிகழ்த்தப்பட்டது.

❖ **மட்டக்களப்பு கல்வி வலயப் பாடசாலைகள் பற்றிய விபரம்**

| வலயப் பிரிவுகள் | பாடசாலை வகை | | | | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| | I AB | IC | வகை II | வகை III | |
| மண்முனை வடக்கு | 08 | 04 | 16 | 11 | 39 |
| ஏறாவூர்ப் பற்று | 01 | 03 | 03 | 02 | 09 |
| மண்முனைப் பற்று | 01 | 03 | 04 | 08 | 16 |

அட்டவணை 2.1 (வலயக்கல்வி அலுவலகம் - மட்டக்களப்பு - 2015)

**குறிப்பு :** மேற்படி இவ் ஆய்வுக்கு இணங்க பிரத்தியேக வகுப்புக்களின் செல்வாக்கு மிகையாகக் காணப்பட்டதால் மண்முனை வடக்குப்பிரதேசம் தெரிவு செய்யப்பட்டது. இங்கு உயர்தரப்பிரிவு காணப்படும் IAB மற்றும் IC பாடசாலைகளில் 2 : 1 எனும் அடிப்படையில் இலகு எழுமாற்று மாதிரிகள் மூலம் ஒவ்வொரு வகைப் பாடசாலைகளிலும் மாதிரிகள் பெறப்பட்டன.

| பாடசாலை வகை | எண்ணிக்கை | மாதிரித் தெரிவு |
|---|---|---|
| IAB / தேசியபாடசாலை | 08 | 04 |
| IC | 04 | 02 |

அட்டவணை 2.2

- **மாதிரியாக தெரிவு செய்யப்பட்ட மண்முனைவடக்குப்பிரதேச பாடசாலைகள் பற்றிய விபரம்**

| வகை | மாதிரி | பாடசாலையின் பெயர் | முகவரி |
|---|---|---|---|
| **I AB** | 04 | மட்/மட்/ இந்துக் கல்லூரி | மட்டக்களப்பு |
| | | மட்/மட்/ மெதடிஸ்த மத்திய கல்லூரி | மட்டக்களப்பு |
| | | மட்/மட்/ வின்சன்ட் பெண்கள் உயர்தர தேசிய பாடசாலை | மட்டக்களப்பு |
| | | மட்/மட்/ புனித மிக்கேல் கல்லூரி தேசிய பாடசாலை | மட்டக்களப்பு |
| **I C** | 02 | மட்/மட்/ கருவப்பங்கேணி விபுலானந்த வித்தியாலயம் | மட்டக்களப்பு |
| | | மட்/மட்/ கல்லடி முகத்துவாரம் விபுலானந்தா வித்தியாலயம் | மட்டக்களப்பு |

அட்டவணை 2.3

- **தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளின் உள்ளக ரீதியான ஆளணியினர் பற்றிய விபரம்.**

| பாடசாலையின் பெயர் | அதிபர் மற்றும் பிரதி அதிபர்கள் | உயர்தரம் கற்பிக்கும் ஆசிரியர்கள் | உயர்தர மாணவர்கள் |
|---|---|---|---|
| மட்/மட்/ இந்துக் கல்லூரி | 03 | 16 | 110 |
| மட்/மட்/ மெதடிஸ்த மத்திய கல்லூரி | 04 | 20 | 120 |
| மட்/மட்/ வின்சன்ட் பெண்கள் உயர்தர தேசிய பாடசாலை | 04 | 22 | 185 |
| மட்/மட்/ புனித மிக்கேல் கல்லூரி தேசிய பாடசாலை | 04 | 20 | 175 |
| மட்/மட்/ கருவப்பங்கேணி விபுலானந்த வித்தியாலயம் | 04 | 12 | 75 |
| மட்/மட்/ கல்லடி முகத்துவாரம் விபுலானந்தா வித்தியாலயம் | 03 | 10 | 85 |

அட்டவணை 2.4 (வலயக்கல்வி அலுவலகம் மற்றும் பாடசாலைப் பதிவேடு 2014 - 2015)

குறிப்பு : இவற்றில் இருந்து அதிபர்கள் மற்றும் பிரதி அதிபர்கள் அனைவரும் மாதிரிகளாகத் தெரிவு செய்யப்பட்டு இவ் ஆய்வுக்கு உடபடுத்தப்படவுள்ளனர். ஆனால் ஆசிரியர்கள், உயர்தர மாணவர்களின் எண்ணிக்கை அதிகம் என்பதனால் விகிதாசாரத்தின் அடிப்படையிலும் இலகு எழுமாற்று மாதிரி மூலமும் அத்தகையோர் தெரிவு செய்யப்பட்டு மாதிரிகளாக்கப்பட்டனர்.

### ❖ மாதிரியாகத் தெரிவு செய்யப்பட்டோர் விபரம்

| பாடசாலையின் பெயர் | மொத்த உயர்தர ஆசிரியர்கள் | மாதிரி ஆசிரியர்கள் | மொத்த உயர்தர மாணவர்கள் | மாதிரி மாணவர்கள் |
|---|---|---|---|---|
| மட்/மட்/ இந்துக் கல்லூரி | 16 | 08 | 110 | 22 |
| மட்/மட்/ மெதடிஸ்த மத்திய கல்லூரி | 20 | 10 | 120 | 24 |
| மட்/மட்/ வின்சன்ட் பெண்கள் உயர்தர தேசிய பாடசாலை | 22 | 11 | 185 | 37 |
| மட்/மட்/ புனித மிக்கேல் கல்லூரி தேசிய பாடசாலை | 20 | 10 | 175 | 35 |
| மட்/மட்/ புனித சிசிலியா பெண்கள் தேசிய பாடசாலை | 12 | 06 | 75 | 15 |
| மட்/மட்/ விவேகாணந்தா பெண்கள் மகாவித்தியாலயம். | 10 | 05 | 85 | 17 |

அட்டவணை 2.5

குறிப்பு : (2 : 1) எனும் விகிதாசாரத்தின் அடிப்படையில் 50 ஆசிரியர்களும்,5: 1 எனும் விகிதாசாரத்தில் 150 உயர்தர மாணவர்களும் மாதிரிகளாகத் தெரிவு செய்யப்பட்டு அவர்களின்


பெற்றோர்களிடமும் ஆய்வு நிகழ்த்தப்பட்டது. இதனை மையமாகக் கொண்டு ஆய்வறத்தின் அடிப்படையிலும், இலகு எழுமாற்று மாதிரி அடிப்படையிலும் மாதிரி அங்கத்தவர்கள் தெரிவு செய்யப்பட்டு ஆய்வுத்தரவுகள் பெறப்பட்டன.

### 3.0 தரவுப்பகுப்பாய்வும் வியாக்கியானமும் (RESUTS AND DISSCUSSION)

இவ்வாய்வின் தரவுப் பகுப்பாய்வு முறைகளாக அளவறிசார் முறையும், பண்பறிசார் முறையும் பயன்படுத்தப்பட்டுள்ளன. இது அதிபர், ஆசிரியர்கள், உயர் தர மாணவர்கள், அவர்களின் பெற்றோர்கள் ஆகியோரின் விபரங்களைக் கொண்டமைவதால் இம் முறை பயன்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாய்வின் தரவு வடிவங்களைத் தீர்மானித்து பின்னர் தரவுகளைச் சேகரித்து அத்தரவுகளைப்பகுப்பாக்கம் செய்து Micro soft Excel-2007 மூலம் கிடைச் சலாகை வரைபுகளாகக் குறித்துக் காட்டப்பட்டுள்ளதால் இவ் ஆய்வானது அளவை நிலை ஆய்வாகக் காணப்படுகின்றது.

### 3.1 தரவுப்பகுப்பாய்வு முடிவுகள்.


#### 3.1.1 உயர்தரம் கற்பிக்கும் பிரத்தியேக வகுப்பு ஆசிரியர்களில் அரச பாடசாலை ஆசிரியர்கள் ஈடுபடுகின்றமை.




உரு 3.1

இங்கு 08 பாடசாலையிலும் உள்ள 150 உயர்தர மாணவர்களிடம் இதற்கான தரவுகள் பெறப்பட்டன. அதற்கிணங்க 94 மாணவர்கள் ஆம் எனவும் 36 மாணவர்கள் ஓரளவு எனவும் 20 மாணவர்கள் இல்லை எனவும் கூறியவற்றிலிருந்து முறைசார் கல்வியில் பாடசாலை ஆசிரியர்களின் அலட்சியப்போக்கும் அரசபாடசாலை ஆசிரியர்களே அதிகம் பிரத்தியே தெளிவாக்கப்படுகின்றது.

#### 3.1.2 உயர்தர பிரத்தியேக வகுப்புக்களுக்காக தற்போது அதிகளவான பணத்தினை வசூலிக்கின்றனர்.




உரு 3.2


உயர்தரத்தின் சகல பாடங்களுக்கும் அறவிடப்படுகின்ற பணம் அதிகமானதாகக் காணப்படுவதனை மாதிரியாகத் தெரிவான 150 மாணவர்களின் பெற்றோர்களில் 72.72% ஆனவர்கள் மேற்படி

பிரத்தியேக வகுப்புக்களால் அதிகளவான பணம் செலவாவதனை இக்கருத்துக்களின் மூலம் உறுதிப்படுத்துகின்றது.

### 3.1.3 நேர்காணல் மூலம் பிரத்தியேக வகுப்புக்ளுக்கு செல்லாத மாணவர்களிடம் கேட்கப்பட்ட வினாவுக்கமைவாக:

உங்கள் கற்றல் பாடசாலைக் கல்வியை மட்டும் நம்பியுள்ளீர்களா? எனக்கேட்டபோது: ஆம் எனவும் அத்தோடு பிரத்தியேக வகுப்புக்களுக்கு செல்லும் மாணவர்கள் முன்கூட்டியே பாடத்திட்டடத்தை நிறைவு செய்வதனால் பாடசாலைகளில் ஆசிரியர்கள் மிகவும் வேகமாக பாடத்தினை நடாத்திச் செல்வதனால் தமக்கு விளங்குவதில்லை எனவும் குற்றம் சுமத்தியுள்ளனர். வீட்டின் பொருளாதாரக்கஷ்டம் காரணமாகவே தாம் பிரத்தியேக வகுப்புக்களுக்கு செல்வதில்லை எனவும் அத்தோடு இதனால் எமக்கு ஏனைய மாணவர்களோடு ஒப்பிடுகையில் உளவியல் ரீதியான பாதிப்புக்கள் ஏற்படுவதாகவும் கூறுகின்றனர்.இவற்றில் இருந்து பிரத்தியேக வகுப்புக்களுக்கு செல்லாமையால் குறிப்பிட்ட மாணவர்கள் அடையும் தாக்கங்களும்,இலவசமாக வழங்கப்படுகின்ற முறைசார் கல்வியின் திறனற்ற தன்மையும் புலப்படுத்தப்படுகின்றது.

### 3.1.4 பிரத்தியேக வகுப்புக்களில் முன்கூட்டியே கற்பதனால் மாணவர்கள் பாடசாலைக் கற்பித்தலின்போது அலட்சியம் காட்டுகின்றமை.





பிரத்தியேக வகுப்புக்களில் முன்கூட்டியே கற்பதனால் மாணவர்கள் பாடசாலைக் கற்பித்தலின்போது அலட்சியம் காட்டுகின்றனர் என்பதனை எனும் வினாக் கூற்றிற்கு மாதிரியாகத் தெரிவான 50 ஆசிரியர்களில் 41 பேர் ஏற்கிறேன் எனவும் 09 ஆசிரியர்கள் ஓரளவு ஏற்கிறேன் எனவும் விடையளித்ததின் மூலம் முறைசார் கல்வியில் அனேகமான மாணவர்கள் அக்கறை காட்டவில்லை என்பது புலனாகின்றது.

### 3.1.5 மாணவர்கள் பிரத்தியேக வகுப்புக்களுக்கு செல்வதற்கான அடிப்படைக்காரணங்கள்

| குறியீடு | விடைகள் |
|---|---|
| 1 | **கற்பதற்கான இலகு வழிகள் தரப்படுகின்றமை** |
| 2 | **தேர்ந்தெடுக்கப்பட்ட வினாக்களை மையமாகக்கொண்ட அணுகுமுறைகள்.** |
| 3 | **வீட்டு நிர்ப்பந்தங்கள்** |

**அட்டவணை 3.1**



உரு 3.4

மேற்படி 150 மாணவர்களினதும் தரவுகளுக்கிணங்க 50% ஆனவர்கள் வீட்டு நிர்ப்பந்தங்களினால் தான் என்பதையும்,100% ஆனவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்ட வினாக்களை மையமாகக்கொண்ட அணுகுமுறைகள் எனவும், 75% ஆனவர்கள் கற்பதற்கான இலகு வழிகள் தரப்படுகின்றமை எனவும் கூறியிருப்பதன் பாடசாலைகளில் முறைசார் கல்விக்கு ஆசிரியர்கள் அதிக அக்கறை காட்டுவதில்லை என்பது புலப்படுத்தப்படுகின்றது.

**4.0 தீர்வுகளும், ஆலோசனைகளும். (CONCLUSIONS)**

**4.1 பாடசாலைக் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளை பிரத்தியேக வகுப்புக்களுக்கு நிகரான விதத்தில் நவீனமயப்படுத்தல் வேண்டும்.**

மாணவர்கள் பெரும்பாலும் பிரத்தியேக வகுப்புக்களுக்கு செல்வதற்கான காரணங்களாகஅங்கு கற்பதற்கான இலகு வழிகள் தரப்படுகின்றமை, தேர்ந்தெடுக்கப்பட்ட வினாக்களை மையமாகக்கொண்ட அணுகுமுறைகள், நவீன கற்பித்தல் உபகரணங்கள் போன்றனவற்றினைப் பயன்படுத்துதல் போன்றவற்றினைக் குறிப்பிடுகின்றனர். எனவே இவற்றினைபாடசாலைகளில் உரிய முறையில் மேற்கொள்கின்றபோது மாணவர்கள் பிரத்தியேகமாக நாடுகின்ற கல்வித்தேவைகள் குறைக்கப்படலாம். அத்துடன் முறைசார் கல்வியின் தரமும் முறைசார் கல்வியை கற்பிப்பவர்களின் தரமும் மேம்படும்.

**4.2 குறிப்பாக அரசாங்க பாடசாலை ஆசிரியர்கள் பிரத்தியேக வகுப்புக்கள் நடாத்துவதனை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.**

முறைசார் கல்வியைவழங்கும் ஆசிரியர்களே பிரத்தியேகமாக கல்வி வழங்கும் போதுதான் எம்மை குறைவாக சிந்திக்கவைக்கின்றது. ஆசிரியர்கள் அல்லாத ஏனைய நபர்கள் பிரத்தியேக வகுப்புக்களை நடாத்துவதற்கு தடைவிதிப்பதனைவிட அரச பாடசாலை ஆசிரியர்கள் பாடசாலைகளிலும் கற்பித்துவிட்டு பிரத்தியேக வகுப்புக்களிலும் இவ்வாறாக பிரத்தியேகமாக கல்வி வழங்குவதில் இருந்து தடைவிதிக்க வேண்டும். இதனைக் குறிப்பிட்ட வலயக் கல்வி பணியகம் மூலமாக மேற்பார்வை செய்வதும் சிறப்பானது. இவ்வாறு மேற்கொள்ளும் போது முறைசார் கல்வியில் அதிக அக்கறைகாட்டுவது வலுப்படும்.

**4.3 மீத்திறன் குறைவான, மெல்லக்கற்கும் மாணவர்களுக்கே பிரத்தியேகமாக கல்வி தேவைப்படுவது தொடர்பான விழிப்புணர்வுகளை பெற்றோருக்கு ஏற்படுத்துதல் வேண்டும்.**

மேலதிகமாகக் கல்வி தேவைப்படும் நபர்களுக்கு மட்டும் பிரத்தியேகக் கல்வி போதுமானது. அத்துடன் அம்மேலதிகக் கல்வியை பாடசாலைக்கூடாக மேற்கொள்ளும் போது கல்வியின் இலவசத்தன்மை மேம்படுத்தப்படும். இது தொடர்பாக பெற்றோர்களுக்கு விழிப்புணர்வுகள் வழங்கப்படுவதோடு செயல் முறையாகவும் காடட்டப்பட வேண்டும். ஏனைய பிள்ளைகளோடு ஒப்பிடுவதால் தனது பிள்ளையின் நிலை உறுதியற்றுப் போவதை பெற்றோருக்கு எடுத்துக்கூறல் அதாவது மெல்லக்கற்கும் மாணவர்களுக்கு பாடசாலைகளில் மாலைவேளைகளில் கற்பித்தலை மேற்கொள்ள நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் பிரத்தியேக கல்விக்கான செலவுகள் குறைக்கப்படும்.

**4.4 பாலினக்கவர்ச்சியால் பிரத்தியேக வகுப்புக்களில் நடைபெறும் ஒழுக்கமீறுதல்கள் முறைசார் கல்வியில் பாதிப்புக்களை ஏற்படுத்துவது தொடர்பாக அதிபர் கவனம் செலுத்துதல் வேண்டும்.**

முறைசார் கல்வியின் முக்கியத்துவத்தினை மாணவர்களுக்கு உணர்த்துவதோடு பெரும்பாலும் பிரத்தியேக வகுப்புக்களில் மாணவர்கள் ஒழுக்கத்தினை எதிர்பாார்க்க முடியாது. அங்கு அதற்கான எவ்விதமான கட்டுப்பாடுகளும் இல்லை. ஆண்கள் பெண்கள் இரு பாலாரும் எவ்வாறும் கற்கலாம். ஆனால் ஒரு சில மாணவர்கள் இதனை வேறுவகையில் பயன்படுத்துகின்றனர்.மாணவர்களின் பாலினக்கவர்ச்சிகளின் மோகத்திற்காகவே சில மாணவர்கள் பிரத்தியேக வகுப்புக்களுக்குச் செல்கின்றனர். இவை பாடசாலைகளிலும் தொடர்வதற்கான வாய்ப்புக்களை அதிபர்கள் ஏற்படுத்தாது தடுக்க வேண்டும். உ-ம் சமூகவலைத்தளப்பயன்பாடு, தொலைபேசிப்பாவனை.

**4.5 பிரத்தியேக வகுப்புக்களுக்கு செல்லும் மாணவர்களின் அலட்சியப்போக்கு தொடர்பாக கண்காணித்தல் வேண்டும். செல்லாத மாணவர்கள் சார்பாகவும் முக்கிய கவனம் செலுத்துதல் வேண்டும்.**

பிரத்தியேக வகுப்புக்களுக்கு செல்லுகின்ற மாணவர்கள் முன்கூட்டியே பாடத்திட்டம் மற்றும் இலகு செய்கை முறைகளை இனங்கண்டுவிடுவதனால் பாடசாலை வகுப்பறைக் கற்பித்தல் செயற்பாடுகளின்போது அலட்சியப்போக்கினை வெளிப்படுத்துகின்றனர் இதனால் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் ஏனைய பிரத்தியேக வகுப்புக்களுக்குச் செல்லாத மாணவர்களுக்கும் இடையூறாகக்காணப்படுகின்றது. எனவே இவ்வாறான மாணவர்களுக்கு வகுப்பறைக்கற்பித்தலின்போது தக்க நடவடிக்கை மேற்கொளள்ப்பட வேண்டும். இதன் மூலம் அவர்களுக்கு முறைசார் கல்வியின் மீது கவனம் செலுத்துவதற்கு நாட்டம் ஏற்படுத்தப்படும். இவை தொடர்பான விழிப்புணர்வுகளை மாணவர்களுக்கு ஏற்படுத்துவதன் மூலம் முறைசார் கல்வியை வலுப்படுத்த முடியும்.

**4.6 ஆசிரியர் பற்றாக்குறைகள் நிவர்தியாக்கப்படுவதோடு குறிப்பான பாடங்களுக்கான ஆசிரியர்களை உள்வாங்குவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.**

குறிப்பாக மாணவர்கள் பாடசாலையில் ஆசிரியர் வளம் குறைவான பாடங்களுக்காகவும், கடினமான பாடங்களுக்காகவும் தான் பிரத்தியேக கல்வியை நாடுவர். எனவே இவ்வாறான முக்கியபாடங்களுக்கான ஆசிரியர் பற்றாக்குறைகள் உரிய முறையில் தீர்க்கப்படும்போது மாணவர்கள் பிரத்தியேகக் கல்வியை நாடுவது குறைக்கப்படும். இதன் மூலம் முறைசார் கல்வியை மட்டுமே கற்க வேண்டிய சூழ்நிலைகள் உருவாக்கப்படும். இதனைப் பயன்படுத்தி ஆசிரியர்கள் மாணவர்களின் அலட்சியப்போக்கினைக்குறைத்து அனைத்து மாணவர்களுக்குமான சமவாய்ப்பு நிறைந்த கல்வியை வழங்கமுடியும். கல்வியில் சமவாய்ப்பு என்பது பிரத்தியேகக் கல்விக்கு எதிரானது. ஏனெனில் பிரத்தியேகக் கல்வி குறிப்பிட்ட மாணவர்களுக்கானது. எனவே இவை மூலம் முறைசார் கல்வியை வலுப்படுத்தலாம்.

**4.7 பிரத்தியேக வகுப்புக்களின் ஆடம்பரமான செயற்பாடுகளில் இருந்து விடுபடுவதற்கான விழிப்புணர்வுகளை ஏற்படுத்தல் வேண்டும்.**

ஏனைய பிள்ளைகள் பிரத்தியேக வகுப்புக்களுக்கு செல்கின்றார்கள் என்பதற்காகவும் தனது நிர்ப்பந்தத்தின் பேரிலும் பிள்ளைகளைப் பெற்றோர்கள் பிரத்தியேக வகுப்புக்களுக்கு அனுப்புவதால் மாணவர்கள் மனவுளைச்சலுக்கு உள்ளாகும் நிலை தொடர்பாக பெற்றோருக்கு விழிப்புணர்வுகளை ஏற்படுத்தல் வேண்டும். அடுத்த வீட்டுப்பிள்ளை இரு வகுப்புக்களுக்கு சென்றால் என்னுடைய பிள்ளை மூன்று வகுப்புக்களுக்காவது செல்ல வேண்டும் என்கின்றதான மனநிலையை

பெற்றோர்களிடம் இருந்து நீக்குவதன் மூலம் ஆடம்பரமான, செலவுமிக்க பிரத்தியேகக் கல்வியிலிருந்து மீண்டு வினைத்திறன் மிக்க முறைசார் கல்விக்கு வழிகோல முடியும்.

### 5.0 உசாத்துணைகள்


1. அருள்மொழி, செ. (2008) "***கல்வி ஆய்வு முறைகள்"*** எவக்கிறீன் பிரிண்டர்ஸ் மட்டக்களப்பு.
2. ஜெயராசா, சபா. (2008) "***கல்விக் கோட்பாடுகளும் மாற்றுச் சிந்தனைகளும்***,"சேமமடு பதிப்பகம், கொழும்பு.
3. தனபாலன், பா. (2002) ***"கல்வியும் நவீகத்துவமும்***" பூபாலசிங்கம் புத்தககாலை, கொழும்பு.
4. நிக்கலஸ், ஜெ. 2009)***"நவீன கல்விச் செல்நெறிகளின் போக்கு"*** ஆசிர்வாதம் அச்சகம், யாழ்ப்பாணம்.
5. கினிகே, ஐ. எல், (2008),"***புதிய கலைத்திட்ட நோக்கும் பாடசாலைக் கல்வியில் ஏற்படுத்தும் மாற்றமும்"*** கல்வி வெளியீட்டகம்.
6. லொறின், அன்டேசன்,(1999) "ஆசிரியர் விளைதிறனை அதிகரித்தல்" யுனஸ்கோ- தேசிய ஆசிரியர் கல்வி அதிகாரசபை வெளியீடு.
7. http://www. formal education gov.lk
8. http://www. Current trend in education sector. gov.lk